# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# கேள்வி அறிவித்தல்

## தனியான போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் வழங்குதல்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாணவர்களுக்கான பின்வரும் தனித்தனி சேவை நிலையங்களை நடாத்துவதற்கு தனிநபர்களிடமிருந்தோ அல்லது நிறுவனங்களிடமிருந்தோ இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| நிலைய இலக்கம் | நிலையத்தின் பெயர் |
|---|---|
| **நிலையம் 1** | போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் நிலையம் - வர்த்தக முகாமைத்துவ பீடம் |
| **நிலையம் 2** | போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் நிலையம் - பிரதான நூலகம் |

இச்சேவையை பொறுப்பேற்பவர் இணங்கிய மாதாந்த வாடகையுடன் சேர்த்து குறித்த சேவை நிலையங்களின் மாதாந்த மின்சார பட்டியலுக்கான கொடுப்பனவையும் செலுத்துதல் வேண்டும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினையும் அதனோடு இணைந்த முன் நிபந்தனைகள் அடங்கிய தகவல்களையும் (Prerequisite) பல்கலைக்கழக **பிரதிப்பதிவாளர் (பொது நிருவாகம்)** அவர்களிடமிருந்து **2020.03.06ம் திகதி வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 2.30 மணிவரை** அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும். ஒன்றிற்கு மேற்பட்ட சேவை நிலையங்களை நடாத்த விரும்புபவர்கள் தனித்தனி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

பல்கலைக்கழக காசாளரிடம் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்பாக ரூபா 5,000.00ம், மீளளிப்பு செய்ய முடியாத விண்ணப்பக்கட்டணமாக ரூபா 250.00 ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் பதிவாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா, ஒலுவில் என்ற முகவரிக்கு **11.03.2020 ஆம் திகதி அன்று பி.ப. 02.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் சேரக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவாளர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடப்படல் வேண்டும். மேற்படி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **நிலைய இலக்கம், நிலையத்தின் பெயர்** என்பன தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும். [மேலதிக தகவல்களை பிரதிப்பதிவாளர் (பொது நிருவாகம்) அவர்களிடமிருந்து 067-2255177 என்ற தொலைபேசி இலக்கத்தினூடக அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்]

கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் யாவும் விண்ணப்ப முடிவு நேரத்திற்குப் பின் உடனடியாக பிரதிப் பதிவாளர் / பொது நிருவாகம் காரியாலயத்தில் திறக்கப்படும். அவ்வேளை, விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

**குறிப்பு:**

1. விண்ணப்ப முடிவு நேரத்திற்குப் பின், தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
2. விண்ணப்பிக்க விரும்புவரின் பெயரிலேயே விண்ணப்பப் படிவமும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.
3. போட்டோ பிரதி மற்றும் அதனோடு இணைந்த சேவைகள் நிலையத்தை நடாத்திச் செல்ல மனுதாரரின் அனுபவம் மற்றும் மனுதாரரினால் உத்தேசித்துக் குறிப்பிடப்படட்ட ஆகக் கூடிய மாதாந்த வாடகை என்பனவே சேவை உறுப்பினரை தெரிவுசெய்யும் பிரதான காரணிகளாகக் கொள்ளப்படும்.
4. எந்தவொரு விலை மனுவையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு பூரண உரிமையுள்ளது.

**பதிவாளர்**
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்